## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (யூன் 2017)

LIBRARY
02 MAY 2019
EASTERN UNIVERSITY, SRI LANKA

## SAS 3133 சமயம் பற்றிய சமூகவியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி-I இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் பகுதி-II இல் இருந்து யாதேனும் ஒரு வினாவுக்கும் விடை தருக.**

---

### பகுதி – I

01. (அ) சமயம் பற்றிய சமூகவியலின் தனித்துவமான அம்சங்களைச் சுருக்கமாக எடுத்துரைக்குக.
(13 புள்ளிகள்)

(ஆ) சமயம் எவ்வாறு ஒரு சமூக நிறுவனமாக (Social Institution) தொழிற்படுகிறது என்பதனைத் தெளிவுபடுத்துக.
(12 புள்ளிகள்)

02. (அ) கார்ல் மார்கஸ்(Karl Marx) மதத்தையும், மதத்தின் இருப்பையும் எதிர்மறையாகக் கருதுவதற்கான காரணங்களை விபரிக்குக.
(13 புள்ளிகள்)

(ஆ) மக்ஸ் வேபரின் (Max Weber) சமயம் பற்றிய சிந்தனைகள் பொருளாதாரத்துடன் தொடர்புபடுவதனைப் பற்றி விளக்குக.
(12 புள்ளிகள்)

03. (அ) சமயச் சார்பின்மையாதல் (Secularization) என்னும் எண்ணக்கருவைத் தெளிவுபடுத்துவதுடன் தற்காலத்தில் இப்போக்கு அதிகரித்து வருவதற்கான காரணங்களையும் தருக.
(13 புள்ளிகள்)

(ஆ) குலக்குறிய வழிபாட்டுமுறை (Totemism) பற்றி சுருக்கமாக விளக்கி, மட்டக்களப்புப் பிராந்திய சமயச் சூழலினுள் குலக்குறிய மரபு பிரதிபலிக்குமாற்றினை தெளிவுபடுத்துக.
(12 புள்ளிகள்)

04. (அ) புதிய சமய வழிபாட்டு மரபுகள் கொண்டிருக்கும் சமூகவியற்பாங்கான குணாம்சங்களைத் தக்க உதாரணங்களுடன் விளக்குக.
(13 புள்ளிகள்)

(ஆ) சிறிய சமயக் குழுக்களான "cult" "sect" என்பவற்றின் பண்புகளை ஒப்பீட்டு ரீதியில் விபரிக்குக.
(12 புள்ளிகள்)

## பகுதி – II

01. சமய வாழ்க்கையின் மூலவேர்கள் தொடர்பிலும் புனிதம், மாசு என்ப பற்றியும் எமில் துர்க்கைம் (Emile Durkheim) முன்வைத்து சமூகவியல் சிந்தனைகளை விரிவாக விபரித்து, தற்கால சமூக கட்டமைப்பினுள் அவை கொண்டிருக்கும் பொருத்தப்பாட்டினை மதிப் செய்க.

(25 புள்ளிக

02. சமயப் புனைவு (Religious Myth) என்னும் எண்ணக்கரு வரையறுத்து, அது தொடர்பான சமூகவியற் கோட்பாடுகளுள் நான்கி அடிப்படையாகக் கொண்டு, சமயப் புனைவுகளின் உருவாக்கம் பற் சமூகவியலாளர்களின் தர்க்க ரீதியான அபிப்பிராயங்களை விரிவ ஆராய்க.

(25 புள்ளிக

*****